# MAA PAAVI NAAN

மா பாவி நான்
மா பாவி நான்
மாபெரும் துரோகி
பாவத்தில் முழ்கி

உம் பிரசன்னத்தை இழந்தேன்
சகதியில் விழுந்தேன்
ஏற்றுக்கொள்வீரா

இருள்சூழ்ந்த நிலமையில் வாழ்கின்றேனே
பரிசுத்த ஸ்தலத்திற்குள் அழைத்திடுமே
அழுகின நிலமையில் வாழ்கின்றேனே
உயிர்பிக்கும் கரங்களை நீட்டிடுமே

உம் மன்னிப்பு மாறாது
உம் அன்போ குறையாது
உம் கிருபை அளவில்லாதது
உம் தயவோ பெரியது
ஏற்றுக்கொள்வீரா

உம்மை மறந்தேனே நான்
வாழ்வை இழந்தேனே நான்
மறுவாழ்வு தந்தென்னை அணைத்திடுமே

நான் ஏமாற்றி ஏமாந்து பின்மாறினேன்
உத்தமனாய் என்னை மாற்றிடுமே

உம் மன்னிப்பு மாறாது
உம் அன்போ குறையாது
உம் கிருபை அளவில்லாதது
உம் தயவோ பெரியது
ஏற்றுக்கொள்வீரா

உம்மோடே சேரனும் உம்மோடே வாழனும்
ஏற்றுக்கொள்வீரா
உம் இரத்தம் தந்து மீட்டீரே
உம் ஆவியால் நிறைத்தீரே

உம் பிள்ளை என்று அழைத்தீரே
உம் மார்போடென்னை அணைத்தீரே
உம்மோடே சேரவே உம்மோடே வாழவே
ஏற்றுக்கொண்டீரே